Tamil

# உங்கள் கொவிட்-19 தடுப்பூசியை இப்போது கிரான்போர்னில் செலுத்திக் கொள்ளுங்கள்.

## இப்போது ‘கிரான்பர்ன் டர்ஃப் கிளப்’-பில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மையம் திறக்கப்பட்டுள்ளது

‘மோனாஷ் ஹெல்த்’ சேவையானது, ‘கிரான்பர்ன் டர்ஃப் கிளப்’-பில் சமூகத் தடுப்பூசி மையத்தை நடத்தி வருகிறது. தடுப்பூசி இலவசமாக செலுத்தப்படுகிறது, மேலும் இது பாதுகாப்பானது. உங்களை, உங்கள் குடும்பத்தினரை மற்றும் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.




## இடம்

Cranbourne Turf Club (கிரான்பர்ன் டர்ஃப் கிளப்)
50 Grant St (50 கிரான்ட் தெரு)
Cranbourne VIC 3977 (கிரான்பர்ன் VIC 3977)

## செயல்படும் நேரங்கள்

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை முன்பதிவின்றி காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரில் செல்லலாம்

## அங்கு சென்றடைவதற்கு

**இலவச வாகன நிறுத்துமிடம்:** கிரான்ட் தெரு வழியாக நுழையுங்கள்
**அருகிலுள்ள ரயில் நிலையம்:** கிரான்பர்ன் நிலையம்
**அருகிலுள்ள பேருந்து நிறுத்தம்:** கிரான்பர்ன் இன்ட்டகிரேட்டட் கேர்/ஸ்லேடன் தெரு (பேருந்து வழித்தடம் 760, 791)

## உங்கள் சந்திப்புக்கு முன்பதிவு செய்தல்

**முன்பதிவின்றி நேரடியாகச் செல்வதற்கு அனுமதி உண்டு, ஆனால் தாமதங்கள் அல்லது ஏமாற்றங்களைத் தவிர்க்க, உங்கள் சந்திப்புக்கு முன்பதிவு செய்துகொள்ளுமாறு பரிந்துரைக்கிறோம்.**

முன்பதிவு செய்துகொள்ள, 1800 675 398 என்ற எண்ணை அழைக்கவும். விருப்பத்தேர்வு 1 -ஐத் தேர்ந்தெடுக்கவும், பின்னர் விருப்பத்தேர்வு 1, அதன் பின்னர் விருப்பத்தேர்வு 1 -ஐத் தேர்ந்தெடுக்கவும்.

## கூடுதல் தகவல்கள்

உங்களுக்கு இடம் விட்டு இடம் செல்வதில் உதவி தேவைப்பட்டால், உங்களுக்குத் துணையாக ஒருவரை நீங்கள் அழைத்து வருவதை வரவேற்கிறோம், அல்லது நீங்கள் வரும் நாளன்று உங்களுக்கு உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், நீங்கள் வரும் நாளன்று உங்களுக்குத் தொலைபேசி வழியாக அல்லது தலத்தில் சமூகமாகும் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை எங்களால் ஏற்பாடு செய்ய முடியும்.

உங்களுக்கு மிகவும் ஏற்ற தடுப்பூசியை வழங்குவதற்கு, நாங்கள் தற்சமயம் நடப்பிலுள்ள வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துகிறோம்.

**‘கோவிட்**-19’ தடுப்பூசி பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, நீங்கள் https://sephu.org/covid-vaccination என்ற வலைப்பக்கத்தைப் பார்வையிடலாம்.